2. பேரவை விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

மதுரையில் உயர்நீதிமன்ற பெஞ்ச் அமைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை வெளியிட அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த அறிவிப்பினைப் பேரவைக்கு அவர்கள் அளிப்பார்கள்.

முற்பகல் 11-15

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன் கீழ் மதுரையில் உயர்நீதிமன்ற பெஞ்ச் ஒன்றை அமைப்பதற்கு, தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் மற்றும் உயர்நீதிமன்றத்தின் இறுதி அறிக்கை கிடைக்கப் பெறாதது தொடர்பான விளக்கக் குறிப்பு:

தென் மாவட்டங்களில் வசிக்கின்ற மக்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு, 1972 ஆம் ஆண்டிலேயே தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தின் பெஞ்ச் ஒன்றை மதுரையில் நிறுவுவது அவசியம் என்ற கொள்கை முடிவு எடுத்தது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 246-ன்படி உயர்நீதிமன்றம் தொடர்பான விவகாரங்கள் மத்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்டதாகும். எனவே மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஒரு பெஞ்சை அமைக்க வேண்டுமென்று தமிழக அரசு 1973-ஆம் ஆண்டிலேயே மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. மத்திய அரசு உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு திரு ஜஸ்வந்த் சிங் அவர்கள் தலைமையில் ஒரு கமிஷனை நியமனம் செய்து, மாநிலத் தலைநகரங்களைத் தவிர இதர இடங்களில் உயர்நீதிமன்றங்களின் பிரிவுகளை அதாவது பெஞ்ச்களை அமைப்பது குறித்துப் பொதுவாக ஆராய்ந்து, பரிந்துரைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது.

1984-ஆம் ஆண்டு ஜஸ்வந்த் சிங் கமிஷன் தமிழ்நாட்டுக்கு நான்கு முறை வருகை தந்து, பலதரப்பட்ட மக்களுடனும், அரசு அதிகாரிகளுடனும், பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியுடனும் பேச்சுவார்த்தை நடத்தியது.

ஜஸ்வந்த் சிங் கமிஷன் பரிந்துரைகளை மத்திய அரசு, தமிழக அரசுக்கு அனுப்பிவைத்து, தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்த பின்னர் கருத்துக்களை அனுப்பும்படி கேட்டுக்கொண்டது. தமிழக அரசும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு அந்தப் பரிந்துரைகளை அனுப்பிவைத்து அவரது கருத்துக்களைக் கேட்டுக்கொண்டது.

1987-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழக அரசு மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சருக்கு, மதுரையில் இந்த பெஞ்ச் அமைப்பது குறித்து மீண்டும் ஒரு வேண்டுகோளை அனுப்பிவைத்தது. 1989-ஆம் ஆண்டு தமிழக அரசு மீண்டும் மத்திய அரசுக்கு இது குறித்துக் கடிதம் எழுதியது. சென்னை உயர்நீதிமன்றம் மூன்று நீதிபதிகள் கொண்ட ஒரு குழுவை நியமனம் செய்தது. இந்தக் குழு மதுரைக்குச் சென்று, மதுரையில் உயர்நீதிமன்ற பெஞ்ச் அமைக்கவேண்டிய இடத்தையும், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டப்படவேண்டிய இடத்தையும் தேர்வு செய்ததாகத் தெரிகிறது. ஆனால் அரசாங்கத்திற்கு இது குறித்து இதுவரை எந்த அறிக்கையும் கிடைக்கப்பெறவில்லை.

ஏற்கெனவே இந்தக் குழுவில் நியமிக்கப்பட்ட மூன்று நீதிபதிகளில் இரண்டு நீதிபதிகள் வேறு இடங்களுக்கு மாறுதலில் சென்றுவிட்டபடியால், புதிதாக மூன்று நீதிபதிகள் கொண்ட ஒரு குழு நியமனம் செய்யப்பட்டுள்ளதாக, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி எனக்கு 28-7-1994 அன்று எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். ஆக, 1972-லே தமிழக அரசு மதுரையில் உயர்நீதிமன்ற பெஞ்ச் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முடிவு செய்து நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், இன்று வரை இதற்கு ஒரு இறுதி முடிவு கிடைக்கப்பெறவில்லை.

தென்மாவட்டங்களில் வாழ்கின்ற மக்களின் வசதிக்காக மதுரையில் ஒரு பெஞ்ச் அமைப்பதற்கு, தமிழக அரசு எப்போதும் தயாராக உள்ளது. ஏற்கெனவே நியமிக்கப்பட்ட மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழு, தனது பரிந்துரைகளைச் சமர்ப்பிக்காததாலும், தற்போது புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று நீதிபதிகள் குழு தனது இறுதி அறிக்கையைஅனுப்பவேண்டியுள்ளதாலும், மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில் தமிழக அரசு உள்ளது. சமீபத்தில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் என்னைச் சந்தித்தபோதுகூட, உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழுவின் இறுதி அறிக்கையை விரைவில் அனுப்பிவைக்கும்படி, தலைமை நீதிபதி அவர்களை நான் கேட்டுக்கொண்டேன்.

தமிழகத்தின் சில பகுதிகளில் வழக்கறிஞர்களும், வழக்கறிஞர் சங்கங்களும் மதுரையில் உயர்நீதிமன்றத்தின் பெஞ்ச் அமைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்தைச் சுட்டிக்காட்டியும், விரைவில் அதை அமைக்கவேண்டுமென்று வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் செய்வதோடு போராட்டமும் நடத்தி வருகின்றார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரையில் 1972-ஆம் ஆண்டே மதுரையில் உயர்நீதிமன்ற பெஞ்சை அமைப்பதற்குக் கொள்கை முடிவெடுத்து, அன்றிலிருந்து இன்றுவரை எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், மதுரையில் பெஞ்ச் அமைப்பதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

3. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. செல்வராஜ், பொதுக்கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1994-95-ஆம் ஆண்டிற்கான பொதுக்கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தொன்றாவது மற்றும் நூற்று ஐம்பத்திரண்டாவது அறிக்கைகளை, பொதுக்கணக்குக் குழுவின் சார்பாக, பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்).

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு. அறிமுகம் செய்தல்.

1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.